**இந்திய உயர் ஸ்தானிகராலய பேச்சாளரின் அறிக்கை**

தூத்துக்குடியில் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை பணியில் ஈடுபடுத்தியுள்ளமை தொடர்பான செய்திகள் குறித்து Vidiyal.lk இணையத்தளத்தின் ஆசிரியர் திரு.ரிப்தி அலி அவர்களால் எழுப்பப்பட்டிருந்த கேள்வி ஒன்றுக்கு பதிலளித்திருந்த இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர், "இந்தியாவின் தூத்துக்குடியில் இந்திய கடற்படைக்கு சொந்தமான நீர்மூழ்கி கப்பல் ஒன்றினை நிரந்தரமாக கடமையில் ஈடுபடுத்துவதாக கூறும் ஊடக அறிக்கைகளை நாம் பார்வையிட்டுள்ளோம். இவ்வாறு நீர்மூழ்கி கப்பலை அங்கு நிறுத்துவது குறித்த ஊகங்களின் அடிப்படையிலான இந்த செய்தி அறிக்கைகள் அதற்கான காரணங்களையும் தெரிவித்துள்ளன. இந்திய கடற்படையின் நடவடிக்கைகள் உள்ளிட்ட இவ்வாறான செயற்பாடுகள் குறித்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் எந்தவிதமான கருத்துக்களையும் தெரிவிக்க விரும்பவில்லை. இருந்தபோதிலும், செயற்பாட்டு ரீதியான தேவைகள் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் இந்தியாவையும் அதன் நலன்களையும் பாதுகாப்பதற்கான இலக்கினை முழுமையாக அடைவதற்காகவும், நீர்மூழ்கிக் கப்பல்களையோ அல்லது ஏனைய தேசிய சொத்துக்களையோ பணியில் ஈடுபடுத்துவது தொடர்பான முடிவுகள் இந்திய அதிகாரிகளால் எடுக்கப்படுகின்றன'', எனக்குறிப்பிட்டுள்ளார்.

******

Colombo
19 July, 2021